# திறவுகோல்

*2051 சித்திரை*
*மாத இதழ்*



## மட்டில்டா புதினம்
## (ஒரு வாசிப்பு அனுபவம்)

## கொண்டை சேவலும் கோழிச்சாயமும்

## தாய் மாமன்

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# கொண்டை சேவலும் கோழிச்சாயமும்

முன்னுரை:

கொண்டை சேவலும் கோழிச்சாயமும் என்ற இந்த சிறுகதை, உண்மையை அடிப்படையாய் கொண்ட புனைவு சிறுகதை. ஐ தமிழ் வானொலியில் வதந்தி மற்றும் உண்மையை விளங்கி கொள்ளாமல் ஒரு விடயத்தை சொல்லும்போதோ, செய்யும்போதோ நடக்கும் விபரீதங்களை பற்றிய ஒரு கலந்துரையாடலில் திரு. தருமன் என்ற வானொலி அபிமானி சொன்ன உண்மை சம்பவத்தை அடிப்படையாக கொண்டு கற்பனை கலந்து இச்சிறுகதையை புனைந்தேன். உங்கள் நேரத்தை செலவிட்டு இக்கதையை வாசிக்கும் அனைத்து வாசகர்களுக்கும் எனது அன்பான நன்றிகள்.
பின்குறிப்பு : வண்ணம் அல்லது சாயங்களை கோழிச்சாயம் என்பர்

---

தானாகவே தூக்கம் கலைந்து எழுந்து படுத்திருந்த கோரைப்பாயில் அமர்ந்திருந்தான் எட்டு வயதான தருமன். அன்று ஞாயிறு விடுமுறை. அதனால் தான், அம்மா எழுப்பவில்லை என எண்ணிக்கொண்டு எழுந்து கோரைப்பாயை சுருட்டி மூலையில் வைத்து விட்டு பல் துலக்க கொல்லைப்புறம் கிணற்றடிக்கு சென்றான். எழுந்தவுடன் படுக்கையை ஒழுங்கு செய்யாவிட்டால் அம்மாவிற்கு கோபம் வந்துவிடும்.

தமிழ் உபாத்தியாராயிருந்த கண்டிப்பான பெரியண்ணா, ஒரு மனிதனுடைய ஒரு நாளின் வெற்றி காலை எழுந்தவுடன் அவன் படுக்கையை ஒழுங்கு செய்வதில் ஆரம்பிக்கிறது என அடிக்கடி சொல்லவும் தருமன் கேட்டிருக்கிறான். ஆரம்பத்தில் பயத்தில் செய்ய ஆரம்பித்த செயல் இன்று பழக்கமாகி விட்டிருந்தது அவனுக்கு. அம்மா சுறுசுறுப்பாக காலை வேலைகளில் ஈடுபட்டிருந்தாள். கொட்டகையில் கட்டப்பட்டிருந்த வெள்ளையம்மாள், தருமனைப் பார்த்ததும் நட்போடு தலையாட்டியது.

வெள்ளையம்மாளுக்கு மூன்று குட்டிகள். மூன்றுமே வெள்ளையம்மாளைப் போல வெள்ளை வெளேரென அழகாக இருக்கும். தருமன் அவன் வீட்டில் வளர்க்கும் ஆடு, மாடு , கோழி எல்லாவற்றிற்கும் பெயரிட்டுதான் அழைப்பான். காலையில் பள்ளிக்கு கிளம்பும்போதும், மாலை பள்ளி விட்டு வந்ததும் அவற்றோடு உறவாடிவிட்டு தான் விளையாடவே செல்வான்.

பல் துலக்கி அம்மா கொடுத்த தேநீரை பருகிவிட்டு தனது விளையாட்டு உபகரணங்களான பளிங்கு கற்களையும், பம்பரம், கயிறு போன்றவற்றையும் எடுத்துக்கொண்டு அரைஞாண் கால் சட்டையை இழுத்து விட்டுக்கொண்டு விளையாட கிளம்பினான். விடுமுறை என்றாலே நாள் முழுவதும் வீட்டுக்கு பின்புறம்

உள்ள மாந்தோப்பில் தன் வயதையொத்த சிறுவர்களோடு சடுகுடு, கிளித்தட்டு, பல்லாங்குழி, ஆடும் புலியும், பாம்பும் ஏணியும், பாண்டி, பம்பரம், சதவி, கறங்கு, கண் புதைந்து ஆடுதல் போன்ற விளையாட்டுகளோடு குதூகலமாக செல்லும்.

அன்றும் வழக்கம் போல் விளையாட்டு தொடங்கியது. மொட்டையன் தான் ஆரம்பித்தான். ரெங்கசாமி என்ற இயற்பெயர் கொண்ட அவன் மொட்டையனாக மாறியது சுவையான சம்பவம். கோடை காலத்தின் வெக்கையின் காரணமாகவோ, ரெங்கசாமியின் அம்மாவின் அளவில்லா பக்தியின் காரணமாகவோ ஆண்டுக்கு இரண்டு தடவை ரெங்கசாமிக்கு மொட்டை போடப்படும். இதனால் தருமன் உள்பட அனைத்து நண்பர்களுக்கும் அவனை முடி நிறைந்த தலையோடு பார்க்கும் பாக்கியம் அமைந்ததில்லை.

பள்ளியில் கண்டிப்பு நிறைந்த கணித ஆசிரியர் சுப்பிரமணியம் ஐயா, வீட்டுப்பாடம் செய்யாமல் வந்த அவனுக்கு அடிகொடுத்து கூடவே தலைக்கு மேலே மட்டுமில்லை, உள்ளேயும் ஒன்றுமில்லை எனக்கூறி மொட்டையன் என்ற பட்டப்பெயரை அவனுக்களித்தார். அன்று முதல் அவனது ரெங்கசாமி என்ற இயற்பெயர் பள்ளி நாட்குறிப்பேட்டில் மட்டுமே வழங்கி வந்தது. மற்ற அனைவருக்கும் அவன் மொட்டையன் தான்.

மொட்டையன் படிப்பில் பின்தங்கி இருந்தாலும் விளையாட்டில் அவன் தான் எல்லா நேரங்களிலும் வெற்றிக்கனியைப் பறிப்பான். அன்றும் அது தான் நடந்தது. காலையுணவு நேரம் வந்து விட்டதாலும் தொடர்ந்து மொட்டையனே வெற்றி அடைந்து கொண்டிருப்பதாலும், பசியாலும் ஏற்பட்ட சலிப்பாலும் கோபத்தாலும் விளையாட்டை முடித்துக்கொண்டு சிறுவர்கள் தங்கள் வீட்டுக்கு கிளம்பினார்கள்.

தருமனும் தனது பொருட்களை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு கிளம்பினான். மாந்தோப்பை ஒட்டி போன ஒலங்கையில் நடந்து வீட்டை அடைந்து மூங்கில் முள்ளால் வேயப்பட்ட தட்டி படலை திறந்துகொண்டு நுழைந்தான். இருபக்கமும் திண்ணை வைத்து கட்டப்பட்ட நாட்டு ஓடு வேயப்பட்ட வீடு அவர்களுடையது. திண்ணையில் பெரியண்ணா சுத்தமாக குளித்து நெற்றியில் திருநீறு இட்டு சிறிய எழுது பலகையின் முன் அமர்ந்து ஏதோ எழுதி கொண்டிருந்தார். மண் அப்பிய அழுக்கு சட்டையோடு அவனை பார்த்ததும், தருமா இங்கே வா என்றழைத்தார்.

பெரியண்ணா ஆசிரியர் என்பதாலும் கண்டிப்பானவர் என்பதாலும் மேலும் பெரியண்ணாவுக்கும் தருமனுக்கும் வயது வித்தியாசம் அதிகம் என்பதாலும் தருமனுக்கு பெரியண்ணா மேல் எப்போதுமே உள்ளூர பய பக்திதான். அவர் வீட்டிலிருந்தால் தருமனுக்கு நடக்க தெரியாது, ஓட்டமாய் ஓடிவிடுவான். அன்று அவர் அழைத்ததும் பயத்தில் கை கால்கள் நடுங்க இரண்டடி முன்னெடுத்து வைத்தான். தான் காலையிலேயே விளையாட சென்றதும் அழுக்கு படர்ந்து திரும்பி வந்ததும் தான்

காரணம், பெரியண்ணா வசை பாடபோகிறார் என எண்ணி பயம் அப்பி கொண்டது தருமனுக்கு.

பயத்தில் காது அடைத்துக்கொண்டது. அப்போது பெரியண்ணா ‘‘முருகன்கோவில் தெருவில் இருக்கும் அத்தை வீடு தெரியுமில்லே.. ஓடிப்போய் கோழிச்சாயம் வாங்கிக்கொண்டு வா’’ என பணித்தார்.

அப்பாடா என ஆறுதலைடைந்து, என்ன ஏது என திருப்பி கேட்காமல் அவன் குதூகலமாக அத்தை வீட்டுக்கு ஓட்டமெடுத்தான்.

இரண்டு தெரு தள்ளி இருக்கும் அன்னம்மாள் அத்தை வீடு அவனுக்கு நன்றாய் தெரியும். எப்போது போனாலும் அத்தை வாஞ்சையாய் அவனை வரவேற்று சாப்பிட ஏதும் கொடுத்து வீட்டிற்கு கிளம்பும் போது முருங்கைக்காய், கத்திரிக்காய், வாழைப்பழம் என பை நிறைய இருப்பதைக் கொடுத்து அனுப்புவாள். அப்பாவின் மீது அண்ணன் என்ற பெரிய மரியாதையும் அளவு கடந்த பாசமும் வைத்திருந்தாள் அன்னம்மாள் அத்தை.

அன்றும் தருமனை பார்த்ததும் அத்தை ‘‘வாடா பொடியா..அப்பா , அம்மா, பெரியண்ணா எல்லாம் சுகமா? சாப்பிட்டாயா? கை கழுவிவிட்டு வா புட்டு அவிச்சிருக்கேன் சாப்பிடலாம்’’ என அன்பாய் வரவேற்றாள். கடும்பசியில் இருந்த தருமனுக்கு அத்தையின் கைமணத்தோடு சுடசுட பரிமாறப்பட்ட புட்டு தேவாமிர்தமாக இருந்தது.

சாப்பிட்டு முடிக்கும் வரை காத்திருந்த அத்தை
‘‘ஏதும் விடயம் சொல்லி விட்டதா அம்மா’’ எனக்கேட்டாள். பசி நீங்கி தெளிவு பிறந்த தருமனுக்கு பெரியண்ணா சொன்ன விடயம் நினைவில் வந்தது. ‘‘ அம்மா இல்லை, பெரியண்ணா தான் கோழிச்சேவல் வாங்கி வர சொன்னார் ‘‘ என்றான் . அத்தை குழப்பத்தோடு பெரியண்ணனா என வினவினாள். பிறகு அண்ணி சேவல் கேட்டிருப்பாள், பொடியன் சரியாய் கேட்காமல் ஓடி வந்திருப்பான் என்றெண்ணி சேவல் பிடிக்க கிளம்பினாள்.

‘‘காலம்பற வந்திருந்த சுலபமா புடிச்சுருக்கலாம். இந்நேரத்திலே மாமா கோழிக்கூட்டை தெறந்து விட்டு இருக்கும். பொழுது சாஞ்சாதான் எல்லாம் அடைய வரும். சரி வா’’ என சொல்லி வீட்டிற்குள் சென்று கை நிறைய குருணையோடு வந்தாள்.

சாணம் மெழுகிய வாசலில் குருணையை விசிறி கோக் கோக் என கோழிபோல் கொக்கரித்தாள். அத்தை வளர்த்த அத்தனை கோழி மற்றும் சேவல்களும் குருணையை நோக்கி ஓடிவந்தன. நல்ல வெட கோழியாய் பார்த்து மெதுவாக அருகே சென்று பிடிக்க எத்தனித்தாள். சேவல் பிடிகொடுக்காமல் நழுவி ஓடியது. அத்தைக்கும் சேவலுக்கு

இடையே நடந்த ஓட்டப்பந்தயத்தை பார்த்து தருமன் சிரித்துக்கொண்டிருந்தான். நெற்றியில் வியர்வை வழிய வேலியின் ஒரு மூலையில் சேவலை வளைத்த அத்தை ‘‘ஏலேய் பொடியா ஓடி வா இங்கே.. அந்த பக்கமா வந்து அணை கட்டு’’ என்று கூச்சலிட்டாள். தருமன் எழுந்து ஓடிச்சென்று  கை இரண்டையும் விரித்து சேவலுக்கு அணை கட்டினான். சேவல் சிறகுகளை அடித்துக்கொண்டு பயத்தோடு பதுங்கியது. அத்தை நெருங்கி சேவலை ஒரே மட்டில் அமுக்கினாள்.

சேவலை பிடித்த பெருமித சிரிப்போடு சணலைப் போட்டு சேவல் காலை கட்டி ஒரு மஞ்சள் பையில் போட்டு அவன் கையில் கொடுத்தாள் அத்தை. ‘‘பை வாயை இறுக்கமாய் பிடிச்சு கொண்டு போ’’ என்றாள் அத்தை. சேவல் மஞ்சள் பையோடு வீட்டுக்கு வந்த தருமனை பார்த்த பெரியாண்ணாவும் அம்மாவும் கேள்விக்குறியோடு நோக்கினர். பெரியண்ணாவை கண்டதும் பயத்தோடு அம்மாவிடம் ஓடிச்சென்று மஞ்சள் பையை நீட்டினான் தருமன். மஞ்சள் பையை திறந்து உள்ளே பார்த்த அம்மா ‘‘என்னடா சேவலா ஏதுடா’’ என கேட்டாள். அத்தை கிட்ட பெரியண்ணா ‘‘அட பொடியா நான் கோழிச்சாயம் வாங்கி வர சொன்னேன் .. நீ கோழி சேவலை பிடித்து கொண்டு வந்திருக்கிறாய்‘‘ என சொல்லி கண்டிப்பும் கடுமையும் தொலைந்துபோன முகத்தோடு வயிறு குலுங்க வாய் விட்டு சிரித்தார். அதை கேட்ட அம்மாவும் வாய்விட்டு சிரித்தாள்.

‘‘மச்சாள் ஆசையோடு அண்ணனுக்கு சேவல் கொடுத்திருக்காள்..கறி சமைக்கிறேன் சாப்பிடலாம் இருங்கோ’’ என கூறி சட்டியும் அரிவாள்மனையும் எடுத்துக்கொண்டு வந்தாள் அம்மா. சிரிப்பை கட்டுப்படுத்த முடியாமல் பெரியண்ணா சிரித்துக் கொண்டிருந்தார். பெரியண்ணாவை  அப்படி பார்த்தறியாத தருமன் சந்தோஷத்திலும், தான் பயத்தில் அரைகுறையாய் செய்தியை தவறுதலாக விளங்கி கொண்டது குறித்து வெட்கத்தாலும் தலைகுனிந்து அம்மாவின் பின்னால் மறைந்து கொண்டான். அந்த பெரும் சிரிப்பு பெரியண்ணாவுக்கும் தருமனுக்கு இடையேயான இடைவெளியைக் குறைத்து நட்பு உறவு பாலம் அமைத்தது.

முற்றும்.

--

## இளவரசி இளங்கோவன்

# வைரஸ்

இன்றைய
காலைப்
பொழுதொன்றில்
கவலையாக
திண்ணையிலமர்ந்து தியானிப்பவனாக
நிலைத்த
பார்வையோடு
நின்றிருந்த
தருணத்தில்
என் வீட்டின்
முற்றத்திலிருந்த
கூட்டிலிருந்து
சரிந்து விழுந்த
சிட்டுக்
குருவியொன்றை
சரியான தருணத்தில்
ஓடிச்சென்று உள்ளங்கையிலேந்திய
நொடிப்பொழுதில்
உயிர் வந்திருந்தது
எனக்கு

அதனை
உள்ளங்கையிலேந்தி
உயிர் உணவை
அளிக்கும்போது
உள்ளுணர்வு
உணர்த்தியது

மனிதநேயமிகு
மானுடமும்
மண்ணில்
நடமாடும்
தெய்வமுமான
மருத்துவமும்
உலகில்
நிலைத்திருக்கும்
வரையில்
கொரோனா
வைரஸ் மட்டுமல்ல
உலகம்
கொணரும்
எந்த வைரஸையும்
கொன்று
புதைத்திடுவோம்
நாம்...

--
நேசமுடன்
ஈ.சு
உடுமலை
9080628870



G.S. திருநிறைச்செல்வன்

# வாழ்க்கை

வாழ்க்கை தனது ரகசியத்தை யாருக்கும் வெளிக்காட்டாது. நாளை என்ன நடக்குமென்று யாருக்கும் தெரியாது. நம் கண்முன் இறப்பு நேரிடும் போது கூட நம்மை மரணம் நெருங்காது என்றே நாம் நினைக்கிறோம். மனிதன் பலனை எதிர்பார்த்தே செயல்களைச் செய்கிறான். விதியின் கைகள் மனிதனின் கழுத்தை நெரிக்கிறது. மறதியும், தூக்கமும் மனிதனுக்கு இல்லையெனில் வாழ்வு நரகமாயிருக்கும்.

வாழ்வில் எப்போதும் வசந்தம் வீசிக் கொண்டிருக்காது. மூன்று வேளை உணவருந்தினாலும் பசிநெருப்பை அணைக்க முடிவதில்லை. மனிதன் பரிதாபத்திற்குரிய ஒரு உயிர். அவனது ஒரு எல்லை மிருகமாகவும் மற்றொரு எல்லை கடவுளாகவும் உள்ளது. அவனது சிந்தனைக் கூட சிறைப்பட்டுத்தான் கிடக்கிறது.

அணையும் விளக்கு பிரகாசமாக எரிவது போலத்தான் அவனது வாழ்வு. அவனுக்கு ஒரு நம்பிக்கை தம்மைவிட உயர்ந்த அனைத்தும் தனக்கு மேலாக இருக்குமென்று. அதனால் தான் இறைவன் வானத்திலிருப்பார் என்றெண்ணி அண்ணாந்து பார்த்து இறைஞ்சுகிறான். எவ்வளவு போராடியும் அவனால் வாழ்வின் இரும்புச் சட்டங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

அவனது பூமியில் அவன் அன்னியமாய்த் தான் இருக்கிறான். மனிதன் கடவுளிடமிருந்து வேறுபடுவது கருணையினால் தான். இயற்கை அவனை மடியில் வைத்து தாலாட்டினாலும் மனிதன் அமைதியற்றவனானவே அலைந்து கொண்டிருக்கிறான். புலன்களை பாவக் காரியத்துக்கு ஒப்புக் கொடுத்து மனிதன் தூங்கிக் கிடக்கிறான்.

உயிர்த்தெழுந்த இயேசுவின் கண்களில் மன்னிப்பின் ஒளி தெரிந்தது. அதைப் பார்த்து மனிதன் பேதலித்துப் போனான். கடவுள் மனிதனுக்கு துயரக் கோப்பையை பரிசளித்தார். அதிலிருக்கும் மதுவைக் குடித்து மனிதன் கேட்பாரற்று வீதியில் விழுந்து கிடக்கிறான். போலிபுகழ்ச்சியின் மூலம் சாத்தான் மனிதனிடமிருந்த தனக்கான காரியத்தை சாதித்துக் கொள்கிறான். வாழ்வின் கோரப்பிடியில் சிக்கி மனிதன் பைத்தியமானான். மரணத்தின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்து சவப்பெட்டிக்கு அருகிலேயே நெடுநாட்கள் காத்திருக்கிறான். வெண்ணிறச் சிறகுகளை உடைய மரணப் பறவை பூமியைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

அற்ப மனிதர்கள் தங்களுக்குள்ளாகவே அடித்துக் கொண்டதைப் பார்த்து சாத்தான் சிரித்துக் கொண்டிருந்தான். கடவுளின் அசரீரியை இவ்வுலகில் ஏழைக் கவிஞனால் மட்டுமே கேட்க முடிந்தது. கடவுளின் இறுதி ஊர்வலத்தில் எந்த மனிதனால் கலந்து கொள்ள முடியும். ஆதாமின் சந்ததியினரின் அழுகுரலுக்கு இறைவன் செவி கொடுப்பதில்லை. சுவர்க்கத்திலிருந்து விரட்டப்பட்டவர்களின் கனவில் கூட

இறைவன் தோன்றுவதில்லை. இவ்வுலகில் மனுஷகுமாரனோடு உண்மையும் மரித்துவிட்டது.



ப.மதியழகன்
115,வள்ளலார் சாலை,
ஆர்.பி.சிவம் நகர்,
மன்னார்குடி - 614001.
திருவாரூர் மாவட்டம்.
தமிழ்நாடு.
Cell: 9597332952, 9095584535
Whatsapp: 9384251845
mathi2134@gmail.com

---



கொரோனோ வைரசு ஒழிப்பில் தொண்டு ஆற்றி வரும் மத்திய, மாநில அரசுகள், அரசு பணியாளர்கள், மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், காவல்துறையினர், மற்றும் சமூக நல தன்னார்வளர்கள், அனைவரும் தன்னலம் கருதாது மக்கள் நலனே பெரிது என்று எண்ணி இரவு, பகல் பாராது பணி செய்கின்றார்கள், அவர்களின் பணி மிகவும் மகத்தானது.

இதற்கு நாம் என்ன கைமாறு செய்ய போகின்றோம்? நன்றி என்ற மூன்று வார்த்தையை சொல்லிவிட்டால் போதாது நாம் அனைவரும் வீட்டினுள் இருப்பதே நாம் அவர்கள் ஆற்றும் பணிக்கு கொடுக்கும் மரியாதை. அது இல்லை, இது இல்லை என்று வெளியில் செல்வதை தவிர்த்து நம் தேவைகளை முடிந்த வரையில் சுருக்கிக் கொண்டு வீட்டை விட்டு வெளியில் வராமல் இருப்பதே நாம் அவர்களுக்கு சொல்லும் நன்றி!

சிந்திப்போம்!
முடிவெடுப்போம்!
செயல்படுவோம்!

V. ராணிவாசுதேவன்,
மன்னார்குடி

# அன்பில்லாத கொரோனாவிற்கு

உன் பிறப்பைக்கூட அறியாத மனிதர்களுக்கு இறப்பை இலவசமாக தருகிற கருணையற்ற கர்ணனா நீ ?

அல்லது கூடு விட்டு கூடு பாய்ந்து பிறர் இறப்பினும் தான் மரிக்காது வாழும் விக்ரமாதித்தனா நீ ?

சிலர் யூகிப்பது போல உன் பிறப்பிடம் தான் வவ்வாலோ ?

அல்லது நீ மனிதத்துக்கு எதிராக தீய சக்தியினால் உருவாக்கபட்ட சவாலோ?

இத்தாலியின் அசாதாரணத்தை துணை கொண்டு தொடங்கிவிட்டாய் மனிதனை உண்பதை..

அதோடு அறிந்துகொள் உன் சதியறிந்து விழித்துக்கொண்டது இந்தியா என்பதை ..

வினை விதைத்தவன் எவனோ, இவ்வுலகமே விதையறுக்கிறது..

சில அரக்கர்களின் சதி செயலின் விளைவை தடுக்க அண்டமே முயற்சிக்கிறது..

இழப்பை அதிகம் கொண்டிருப்பது
எம்மவராயினும் தோல்வியும் அழிவும்
உனக்கானது என்பதை நினைவில் கொள்..

உடன் ''நீ கொன்றது மனிதனை மட்டுமே
மனிதத்தையல்ல'' என்பதையும் அறிந்து கொள்..

தீராத நம்பிக்கையோடு என்றும் நான்!



சுபஸ்ரீ விஸ்வலிங்கம்

# தாய் மாமன்



S.S. கார்த்திக், DME
உள்ளிக்கோட்டை

தாயினால் கிடைத்த
விலை மதிக்க முடியாத பந்தம்
இந்த தாய் மாமன் சொந்தம்....

எல்லோருக்கும் வாய்த்திடாத
அற்புத உறவு....

அன்று முதல் இன்று வரை
அழிக்கமுடியாத
அற்புத உறவு
தாய் மாமன் உறவு....

எல்லா சொந்தங்களும் கூடி இருந்தாலும் தாய்மாமன்
வந்தால் தனி மரியாதை
தரும் உறவு...

பள்ளி பருவத்தில் விடுமுறை என்றாலே முதலில் ஞாபகம் வருவது தாய்மாமன் வீடுதான்....

அக்கா தங்கையுடன் பிறக்கும் ஒவ்வொரு ஆண்மகனுக்கும் கிடைத்த மிகப்பெரிய வரம் தாய்மாமன் உறவு...

புது ஆடை அணிந்தாலும்
புது விளையாட்டு பொருட்கள் வாங்கினாலும்
அது தாய்மாமனின் பரிசாகத்தான் இருக்கும்....

அம்மா, அப்பா, அண்ணன், தம்பி ,தங்கையின் உறவை விட மிகப்பெரிய உறவு தாய்மாமன் உறவு...

எந்தஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் வரும் உறவு...

அக்கா தங்கைக்கு தகப்பனாய் அவர்களின் குழந்தைகளுக்கு உற்ற பாதுகாவலனாய் இருப்பதும் தாய்மாமன் உறவுதான்...

அக்கா தங்கை பெற்றெடுக்கும் குழந்தையினை கையில் வாங்கும் வரம் தாய்மாமனுக்கு கிடைத்த பாக்கியம்...

தான் பெற்றெடுத்த பிள்ளையினை பார்ப்பதை விட அவள் பெற்ற பிள்ளைக்கு அதிக அன்பையும், கேட்டவை எல்லாம் வாங்கி தந்து சந்தோசப்படும் உறவு  தாய்மாமன் உறவு...

குழந்தையின் வளர்ச்சியிலும் பாதுகாப்பிலும் அதிக பங்கு உள்ளவனாய் இருக்கும் உறவு தாய்மாமன் உறவு....

வீட்டிற்கு ஆயிரம் உறவுகள் வந்தாலும் தாய்மாமன் வருவதை பார்த்தால் குழந்தையின் சந்தோஷத்திற்கு அளவே இல்லை....

காதுக குத்துவதில் ஆரம்பித்து கல்யாணம் வரை முன் நின்று உரிமையுடன் செய்யும் உன்னத உறவு தாய்மாமன் உறவு...

தன் குடும்பத்தை கவனிப்பதை விட
தன் அக்கா தங்கையின் தேவைகளை அறிந்தும் புரிந்தும் பூர்த்தி செய்யும் உறவு தாய்மாமன் உறவு

அக்கா தங்கையின் குழந்தைகள் இயற்கை குறைபாடுகளோடு பிறந்தால் அவர்களுக்கு வாழ்க்கையை அளிக்கும் தியாகத்தின் உறவு தாய்மாமன் உறவு மட்டுமே

உறவுகளில் மிகச்சிறந்த உறவு
தாய்மாமன் உறவு
காலத்தால் அழிக்கமுடியாத உறவு
தாய்மாமன் உறவு
வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத உறவு தாய்மாமன் உறவு
கடவுளுக்கு நிகரான உறவு
தாய்மாமன் உறவு
அள்ள அள்ள குறையாத உறவு
தாய்மாமன் உறவு
தரணி எங்கும் போற்றும் உறவு
தாய் மாமன் உறவு

தாய்மாமன்களுக்கு சமர்ப்பணம்

அன்புடன்
S.S.கார்த்திக், DCA, DME
உள்ளிக்கோட்டை

# துளிப்பாக்கள்

கைகள் நீட்டி யாசகம்
கேட்கின்றன மரங்கள்
மனிதம் தழைக்க!

அழைத்தும் போக மறுத்த
பாறையை அரித்துச்சென்றன
கடலலைகள்!

மதிப்புக்கூட்டப்படுகிறது
ஆட்டின் தோலுக்கு
கழிவானது மனிதம்!

தேரை இழுக்க
பின்னோக்கிச் சென்றது
ரசிக்கும் மனம்!

மரத்தில் விழுந்த அரம்
அறுக்கப்படுகிறது
மனித அறம்!

மரங்களின் புன்னகைக்கு
வந்தமர்ந்து பண்ணிசைக்கிறது
பறவைகள்

தற்கொலை
செய்துக் கொள்கின்றன ஆசைகள்
தங்கத்தின் விலையேற்றம்


புதியதாக துளிர்த்த
மரக்கிளை குதுகளிக்கிறது
கூட்டிற்குள் பறவைகள்

கருத்துப்போனது நிலா
வாங்கியக்கடனால்
அமாவாசை

மரங்கள் தோறும்
இசைக்கருவிகள் இசைத்தப்படி
இலையசைவு

--

பெ. விஜயலட்சுமி
காஞ்சிபுரம்
Peviutr@gmail.com



ராஜேஷ்
8ம் வகுப்பு

# நிர்பயா

மாற்றப்பட்ட பெயர்..

மனசை இறங்கவைத்த பெயர்..

மானிடர்கள் அனைவரும் மன்னிப்பு கேட்க வேண்டிய பெயர்.

மனித எமன்களினால் மறைந்துவிட்டாய் நீ..

ஒரு போதும் அந்த மானம் கெட்ட நாய்களை மன்னித்து விடாதே..

ஏனென்றால்..

அவர்கள் சாக்கடை குடித்து வளர்ந்த சாத்தான்கள்..

சக மனிதனின் வலி அறியாத சனியன்கள்..

கருணை வற்றிய காட்டுமிராண்டிகள்..

கருப்பையின் புனிதம் அறியாத காட்டேரிகள்..

ஒருத்தன் திருந்த அல்ல உன் மரணம்..

ஒட்டு மொத்தமாய் திருந்த

--

ராம்.சி
பேராவூரணி

# ஹைக்கூ..


விஜயவர்மன்

## தாய்மை

ஒருயிரும் ஈருடலுமாய் வாழ்வது
காதலென்றால்,
ஓர் உடலிலே ஈருயிர்கள் வாழ்வது
தாய்மை!

## மெர்குரி

என் கோபக் கனலையும் பொறுத்துக்
கொள்கிறாயே!
நீ என்ன சூரியனைக் கட்டி அணைக்கும்
மெர்குரியா?

## கவிதை

நீண்ட கவிதை எழுத விரும்புகிறேன்,
ஏனோ, மூன்று எழுத்து கவிதையாய்
முடிகிறது, உந்தன் பெயரால்!

## உறக்கம்

இரவில் விலகி செல்கிறாள், ஆனால்,
பகலில் ஆர தழுவுகிறாள், நித்திரை
என்னும் மோகினி!

## நஞ்சமுது

பசித்தவனுக்கு அமுதாய், புசித்தவனுக்கு
நஞ்சாய் மாறுகிறது,
ஒரே பானையில் சமைத்த உணவு!

## நீட்சி

சூரியனின் நீட்சியாகிறது நிலவு!
உண்மையின் நீட்சியாகிறது நேர்மை!
நட்பின் நீட்சியாய் சில காதல்!

## புன்னகை

சிலருக்கு அது வேஷம் போடும்
சாதனம்!
சிலருக்கு அது மகிழ்ச்சியின்
வெளிப்பாடு!
உந்தன் புன்னகையோ, மந்திர சாவி!

## கண்கள்

கோடி வார்த்தைகள் சொல்ல முடியாத
செய்தியை,
ஒற்றைப் பார்வையில் சொல்லி
விடுகின்றன கண்கள்!

## மழலை

கிடைத்த பொழுது தொலைத்துவிட்டு,
தொலைத்த பின்பு தேடுகிறோம் -
மழலைப் பருவம்!

## உணர்ச்சி

அடங்காத முரட்டு காளையை,
அடக்கி வாழ்பவன் வெற்றியாளன்
மனிதனின் உணர்ச்சி!

## வெளிச்சம்

ஆந்தைகளின் எதிரி,
குருடனின் தவம்,
விடிவெள்ளியின் நீட்சி வெளிச்சம்!


## மழை சாரல்

வெள்ளத்தில் தத்தளிக்க ஆசை தான்!
ஏனோ, மழை சாரல் போல் அரிதாக
வீசுகின்றாய் –
உந்தன் பார்வையை!

- விஜயவர்மன்

---

## கொரோனா தொற்றில் இருந்து விடுபட




K.சுப்ரியா
ஆறாம் வகுப்பு,
அசோகா சிசு விகார் மெட்ரிகுலேசன் பள்ளி,
மன்னார்குடி.

# தனித்திரு விழித்திரு

சுயசிந்தனையின்
பிறப்பிடம்
தன்னை தானறிந்து
தவறுகள் திருத்திட
தவமின்றி தானாய்
வாய்த்திட்ட
வளமான வாய்ப்பு
தனிமை

ஓடிக்கொண்டிருந்த
உனக்கு
நில் கவனி
அவதானம் கொள்
உயிரைவிட ஒன்றும்
பெரிதில்லை இவ்வுலகில்
உறைக்கும் படி
செய்து விட்ட
தனிமை

வாழ்க்கை
ஓட்டத்தில்
எங்கு நிற்கிறாய்
எங்கு தொடங்கினாய்
என்ன செய்தாய்
என்ன செய்கிறாய்
எப்படி முடிக்க போகிறாய்
யார் நீ
வழக்கமாக
வயது முதிர்ந்து
மரணத்தின் கதவை
நெருங்கிவிட்டவர்களின்
வெகுசிலரால்
விடுக்கப்படும்
வினாக்கள்

இன்று ஆறுதலாய்
நம்மை நாமே திரும்பி
பார்த்து வினவ
வைத்த தனிமை

புறச்சந்தடியிலிருந்து
விலகி அகவெளியில்
உன்னை தேட
பிரபஞ்சம்
பிரசவித்த
பேரழகான குழந்தை
தனிமை

--

**இளவரசி இளங்கோவன்**



க. பிரியதர்சனி
வடுவூர்

# மட்டில்டா புதினம்
## (ஒரு வாசிப்பு அனுபவம்)

மட்டில்டா என்ற புதினம் தமிழில் அவ்வளவு பிரசித்தமல்ல. இதை எழுதிய, குழந்தைகளுக்கான எழுத்தாளர் ரோல்ட் டாலும் தமிழில் பிரபலமானவரல்ல. ஆனால் இதை வாசித்து முடித்த பின் தான் தெரிகிறது, இந்த நாவலும் அதன் ஆசிரியரும் தமிழுக்கும் இந்தியாவிற்கும் மிகமிக தேவை என்று.! நிச்சயம் இந்திய பெற்றோர் மனப்பான்மைக்கும் தமிழக கல்வி சூழலுக்கும் நாவலும் அதன் ஆசிரியரும் சரியான சாட்டையடியாக இருக்கமுடியும். குழந்தைகளின் கல்வி, அவர்களின் பிஞ்சு மனம், அவர்களின் உளவியல், அவர்களின் உலகம் என அக்கு வேறு ஆணி வேறாக பிரித்தறிந்து குழந்தைகளுக்காகவே பல கதைகளை குழந்தைகளைப்போலவே நினைந்து எழுதிய மாமனிதர் ரோல்ட் டால்.

அவரது கதைகள் உலகில் வெகு பிரசித்தம். ஏனெனில் குழந்தைகள் உலகை வெகுவாக எழுத்தில் காட்டியிருக்கிறார் என்ற சாதனையால்தான். மட்டில்டா என்ற நாவலின் கதை, பள்ளி ஆசிரியர்கள் தங்கள் மாணவர்கள் மீது சுமத்தும் பெருங்குற்றங்களைப் பற்றி சிறிது எடுத்துகாட்டிவிட்டு பின் கதையின் நாயகியான மட்டில்டாவை வைத்து தொடர்கிறது. ஒரு சிறந்த அறிவார்ந்த குழந்தை எப்படி தன்னைச் சுற்றியுள்ள பெரியவர்கள் முன்பு தன்னை சிறந்தவளாக நிலை நிறுத்துகிறாள் என்ற போராட்டம்தான் கதையின் ஓட்டம். ஆனால் அது ஒன்றும் குனுணூடிணிதண் ஊடிஞிணுடிணிண இல்லை. குழந்தைகள் விரும்பி படிக்கும் அற்புத நிகழ்வுகளும் சிறிது மாயா ஜாலங்களும் அக்குழந்தையின் பொறுப்பற்ற பெற்றோர் பெரியோர்களுக்கு எதிரான குறும்பான போராட்டமும் என ஜாலியாக விரியும் ஒரு புனைக்கதை. இதை படிக்கும்போது நிச்சயம் அறிவோம்.

மட்டில்டா என்ற குழந்தைக்கு மிகவும் பொறுப்பற்ற பெரும்போக்கு பெற்றோர்கள். எதற்கும் உதவாத ஒரு அண்ணன். பார்ப்பன அரக்கியைப்போல ஒரு தலைமையாசிரியை, தேனைப்போன்ற அன்புடன் ஒரு ஆசிரியர். நல்ல நண்பர்கள். இவர்கள்தான் அவளது உலகம். மட்டில்டா யாரும் சொல்லிக்கொடுக்காமலேயே, தானாகவே தெளிவாக பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டாள் என்று சொன்னால் நம்ப முடிகிறதா.? ஆனால் நாவலில் இது உண்மை. இயல்பாக, தானாகவே இப்படி கற்றுக் கொண்டாள் மட்டில்டா. தனக்கு தேவையான உணவைக்கூட சமைத்துக் கொண்டாள். ஆனால் இதெல்லாம் சாதாரனமாக இரண்டிலிருந்து மூன்று வயதுக்குள் நடக்கிறது.

தினசரி பத்திரிக்கைகள், சமையல் புத்தகங்கள் படிக்கிறாள். தன் பெற்றோர்கள் தன்னை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை என்பதைக் கவனிக்கிறாள். தனிமையில் சிக்கி

வருந்தும் சமயத்தில் நூலகம் சென்று புத்தகம் படிக்கலாம் என்று யோசிக்கிறாள். நூலகம் சென்று படிக்கிறாள். நூலகப் பெண்மணி மட்டில்டாவின் கால்கள்கூட தரையைத்தொடவில்லையே, இவ்வளவு சின்ன வயதில் பெரியவர்கள் படிக்கும் நூல்களைப் படிக்கிறாளே என்று ச்சர்யம் மேலிட பார்க்கிறார். மட்டில்டா படித்து முடித்த நூல்களை பின்னர் ஒரு பட்டியல் போடுகிறார். அதில் ஆங்கில உலகின் சிறப்பான நாவல்கள் இடம்பெற்றுள்ளதைக் கண்டு இவ்வளவு சின்னப் பெண்ணுக்கு இப்படி ஒரு திறமையா என்று வியக்கிறார். இதுவரைக் கூறியதெல்லாம் நாவலின் இரண்டே அத்தியாயங்கள்தான். மீதி அவளது வாசகர்களின் வாசிப்புக்கு.

அவளது பெற்றோர்களோ அவளைத் திட்டுவதிலும் மட்டந்தட்டுவதிலும் சாதாரணமாக கிடக்கும் ஒரு பொருளைப்போலவும் கண்டும் காணாமல் இருப்பதையும் கண்டு வெறுக்கிறாள். அன்புடன்தான் இல்லை, ஆள்கூடவா கண்ணுக்குத் தெரியவில்லை என்ற எண்ணம் மேலோங்க, மட்டில்டா பெரியோர்களைத் தண்டிக்க முடிவெடுக்கிறாள். அதற்காக அவள் என்ன செய்தாள் என்பது கதையில் குறும்புத்தனமாக விவரிக்கப்பட்டுள்ளது. நியாயமான காரணத்தோடு மட்டில்டா தன் போராட்டத்தைத் துவக்குகிறாள்.

குறும்புத்தனமான அவளது போராட்டத்தை நாவலாசிரியர் அருமையாக விவரிக்கிறார். அது குழந்தைத்தன்மையுடன் இருப்பதால் எவ்விதத்திலும் இதை தவிர்த்திட இயலாது. பள்ளியில் சேர்ந்தது முதலே ஒரு பேயிடம் சிக்கியதுபோல உணர்ந்த மட்டில்டா தன் தலைமையாசிரியையைத் தண்டிக்கிறாள். தலைமையாசிரியையின் ஒவ்வொரு சொல்லும் செயலும் குழந்தைகளுக்கு எதிரானதாகவே செய்யும் பேய் போன்ற ஒரு கதாப்பாத்திரம் அவர். கைக்கைத்தின்ற மாணவனை தலையில் தாம்பாலத்தால் ஓங்கி அடிக்கிறாள்.

ரெட்டை ஜடைப் போட்ட பெண்குழந்தையை ஜடையைப் பிடித்து சுற்றி வீசுகிறாள். காதுகளைப்பிடித்து தூக்குகிறாள். தலைமுடியைப்பிடித்துத் தூக்குகிறாள். முழுக்க ஆணி அடிக்கப்பட்ட குறுகலான பெட்டியில் மாணவர்களை நாள் முழுக்க நிற்க வைக்கிறாள். மாணவர்களைப் பந்தாடுகிறாள். மொத்தத்தில் ஓர் அராஜகப் பேயிடம் பல குழந்தைகள் மாட்டிக் கொண்டனர். அதை நாவலாசியர் ஒரு காட்சிவழி விவரிக்கிறார். கடல்நீர் இரண்டாகப் பிளந்து யூதர்களுக்கு வழி விட்டதைப் போல, தலைமையாசிரியை வரும்போது மாணவர்கள் தங்களை நெருக்கிக் கொண்டு அவருக்கு வழிவிட்டு விலகினர். இவ்வாறான ஒரு காட்சியை நினைக்கும்போதே சிந்தனையில் நெருக்கடி தோன்றுகிறது. ஏனெனில் அவளுக்கு யாரையேனும் பிடிக்கவில்லை என்றால் குண்டு எறிவதுபோல தூக்கி எறிந்துவிடுவார் என்ற பயம்தான் காரணம். குழந்தைகள் இல்லாத பள்ளியை தான் உருவாக்கப் போவதாக ஓரிடத்தில் தெரிவிக்கிறாள். ஒட்டு மொத்தத்தில் குழந்தைகளையே விரும்பாதவரிடம் குழந்தைகளை ஒப்படைத்தால் எப்படி இருக்கும்.?

இது மிக மோசமான நிலை. இந்த சூழலை எடுத்து இந்தியா மற்றும் தமிழகச் சூழலோடு பொருத்தி பார்த்தால் அப்படியே பொருந்திப் போகின்றது என்பதுதான் வருத்தமே. இங்கு மாணவர்கள் படிக்க மட்டுமே வேண்டும். அதிவும் மனப்பாடம் செய்து படிப்பதுதான் நடைமுறையில் இருக்கிறது. மற்ற எந்த செயல்பாட்டிலும் அதிக கவனம் கிடையாது. அல்லது செயல்பாடுகளில் கவனத்தை செலுத்த வைப்பதன் மூலம் குழந்தைக்கான நேரத்தை முழுக்க இறுக்கமாக்கி விடுவது. இதுதான் இன்றைய பள்ளி மாணவர்களின் கவலைக்கிடமான சூழல்.

மாணவர்கள் எப்படி இருக்கிறார்களோ அதற்கு ஏற்ற கல்வி சூழல் இங்கே இல்லை. மாறாக, ஒரு கல்விமுறையை உருவாக்கி, அதற்கேற்றார்போல் மாணவர்களையும் ஆசிரியர்களையும் மாற்றுகிற மோசமான நிலைதான் நிலவுகிறது. இதில் ஆசிரியர்கள் என்றுமே மாணவர்கள் பக்கம் நிற்க முடியாது. ஆனால் அது மட்டுமா என்றால் இல்லை. பெற்றோர்களும் தத்தம் குழந்தைகளுக்கு எதிரான சூழலையே உருவாக்குகிறார்கள்.

உதாரணமாக, ‘சார் எம்புள்ள சரியா படிக்கலன்னா நல்லா அடிச்சி படிக்க வைங்க’ என்று தன் குழந்தையின் கல்வி சுதந்திரத்தை ஆசிரியரிடம் அடமானம் வைக்கிறார் ஒரு பாட்டாளி பெற்றோர். இதே ஒரு நடுத்தர வர்க்க பெற்றோர், ’எப்படியாவது முதல் மார்க் எடுத்துடு, இல்லன்னா அவ்வளவுதான் ’ என்று கல்வி வேற்றுமையைத் திணிப்பார். இதே சூழல் பணக்காரர் வீட்டு குழந்தைகளுக்கு பொருந்தாது. ஏனெனில், எந்த முதல்நிலை வீட்டு பணக்காரரின் குழந்தை இங்கே படிக்கிறது.? ஆக, மிகமிக மோசமான நிலைமையில் பள்ளிகளின் நிலை சென்று கொண்டிருக்கின்றது. மட்டில்டா புதினத்திற்கும் இந்திய கல்வி சூழலுக்கும் நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றன. ஆசிரியர்களை மதிக்க வேண்டும் என்று சொல்லிக்கொடுத்திருக்கும் இந்திய கல்விமுறை, அதேபோல் குழந்தைகளையும் மதிக்க வேண்டும் என்று சொல்ல தவரிவிட்டது என்பது ஒரு பெருங்குறை.

பெற்றோர்களும் அப்படிதான். மட்டில்டாவின் பெற்றோர்களைப் போலத்தான் இங்கு பெரும்பான்மையான பெற்றோர்கள் இருக்கின்றனர். தலைமையாசிரியை கதாப்பாத்திரம்போல்தான் இங்கு ஆசிரியர்களுள் சிலரும் இருக்கின்றனர். தலைமையாசிரியை எப்படி மாணவர்களை வெறுத்து தண்டிக்கிறாரோ, அதேப்போல நம் கல்விச்சூழலில் ஏகப்பட்ட தண்டனை முறைகள் உள்ளன. பேசாதே என்று அடக்குவதும் அதிகமாக எழுத வைப்பதும்கூட தண்டனை எனும் வன்முறைதான். ஒட்டு மொத்தமாக இங்கு கல்விச்சூழலே சீர்கெட்டு நிற்கிறது. மாணவர்கள் மதிப்பெண் குதிரைகளாக மாறிவிடுகிறார்கள். ஆசிரியரும் பெற்றோரும் குழந்தைகள் மீது சவாரி செய்பவர்களாக மாறி விடுகின்றனர். இதைவிட மோசமான நிலை வேறெதுவும் இல்லை.

பல அரசு பள்ளிகள் மூடப்படும் நிலையில் உள்ளன. அப்படியானால் ஏழை மாணவர்கள் எங்கு போவார்கள்.? ஆசிரியர்கள் என்ன ஆவார்கள்.? இப்படி ஒரு தேசிய இடர் இருக்கிறதென்று ஆளும் அரசும் கவலைக்கொள்ளவில்லை. இதைப்பற்றி

யோசித்து பார்க்கக்கூட மாணவர்களுக்கு தெரியாது.

மட்டில்டா புதினம் இப்படியான கல்வியியல் பிரச்சனைகளை அதிகம் பேசவில்லை. அது பேசியதெல்லாம் மட்டில்டா என்னும் சின்னப்பெண்ணின் வாழ்வும் அவளது உலகமும்தான். தலைமையாசிரியை, பெற்றோர் இரண்டு பக்கமும் இவர்கள் பிரச்சனையாய் நிற்க இன்னொரு பக்கம் தேனாக ஒரு ஆசிரியரும் தோழியும் கிடைக்கிறார்கள். மிஸ்.ஹனி என்ற அந்த இளம் ஆசிரியை மாணவர்களை அன்போடு ஆதரித்து பாடம் நடத்தி புரியவைத்து அதை வெளிப்படுத்தவும் வைக்கிறாள். தலைமையாசிரியைக்கு நேர் எதிரான குணம் கொண்டவள்.

முதல் நாளே மட்டில்டாவின் அதீத திறமைகளை அவள் கண்டுணர்ந்து கொள்கிறாள். மட்டில்டாவுக்காக தலைமையாசிரியையிடமும் பெற்றோரிடமும் அவளது திறமைகளைப்பற்றி சிலாகித்து பேசுகிறாள். ஆனால் அவர்களோ மட்டில்டாவை மட்டந்தட்டுவதிலேயே மார்த்தட்டிக் கொண்டு நிற்பதைக் கண்டு திகைக்கிறாள். ஆனால் அவர்களோ மட்டில்டாவை மட்டந்தட்டுவதிலேயே மார்த்தட்டிக் கொண்டு நிற்பதைக் கண்டு திகைக்கிறாள்.

இதன்பின் தலைமையாசிரியையின் இன்னொரு கோர முகத்தை மிஸ்.ஹனி மூலமாக தெரிந்துக் கொள்கிறாள் மட்டில்டா. ஒட்டு மொத்தமாக தன் வாழ்வையே கோரமாக்கிக் கொண்டிருக்கும் இந்த பெரியவர்களைத் தண்டிக்க எண்ணுகிறாள். இந்த சமயத்தில்தான் மட்டில்டாவுக்கு ஒரு அதிசய சக்தி கைக்கூடுகிறது. பார்வையின் திறனால் பொருட்களை அசைத்து நகர்த்துகிற சக்தி. இதை வைத்து ஒரு திட்டம் தீட்டி பேயான தலைமையாசிரியையை ஒரு வழி செய்கிறாள்.

அன்று முதல் தலைமையாசிரியை பள்ளிக்கே வராமல் ஊரைவிட்டே ஓடிவிட்டார். மட்டில்டாவின் தந்தை செய்த போலியான கார் வியாபாரத்தால் போலீஸ் அவரை விரட்ட குடும்பத்தோடு நாட்டை விட்டே ஓட எண்ணுகையில் மட்டில்டா தன் அன்பான ஆசிரியை மிஸ்.ஹனியுடன் மட்டுமே தான் இருக்க விரும்புவதாக கூறுகிறாள். மிஸ்.ஹனியும் மட்டில்டாவை ஏற்க, அவளது பெற்றோரும் மட்டில்டாவை ஹனியுடனே விட்டுவிட்டு நாட்டை விட்டே ஓடுகிறார்கள். தன் சொந்த குழந்தையையேஒரு பிரச்சனைப் பிரவியாகப் பார்க்கும் பெற்றோருக்கு குழந்தையை வேறொருவரிடம் விட்டுத்தரும் மனநிலை எளிமையானதுபோல. அதுவும் மட்டில்டா ’பிரச்சனைக்குழந்தை’ என்று முடிவு கட்டிவிட்ட வியாபாரி தந்தைக்கு பிரச்சனையை விட்டுவிடுவது நல்லதுதானே என்று தோன்றியிருக்கும்.

உடனே ஒப்புக்கொண்டுவிட்டு மிஸ்.ஹனியிடமே மட்டில்டாவை விட்டுவிட்டு சென்றார். இதில் வலி மிகுந்த இடம் எதுவென்றால் மட்டில்டாவை விட்டுவிட்டு காரில் ஏறிச் செல்லும் தன் குடும்பத்தை மட்டில்டா பார்க்கிறாள். ஆனால் அவர்களோ ஒரு கணம்கூட திரும்பி மட்டில்டாவைப் பார்க்கவே இல்லை. இருப்பினும் அன்பே

உருவான தன் ஆசிரியையிடம் தான் ஒப்படைக்கப்பட்டதை நினைத்து மட்டில்டா மகிழ்கிறாள்.

இந்த இடம்தான் ஒரு சின்ன சிக்கல். இந்த பெற்றோர், சொந்த குழந்தையை இவ்வளவு எளிமையாக மட்டில்டாவை விட்டுவிட்டதே என்று திகைப்பதா.? அல்லது, மட்டில்டா மிகவும் விரும்பும் ஆசிரியையுடன் சேர்ந்துவிட்டதை எண்ணி மகிழ்வதா.? எதை எடுத்துக் கொள்வது என்பதை வாசகரே முடிவெடுக்க வேண்டும். இரண்டையும் கதையின் இரண்டாம் தர க்ளைமேக்சாக நாவலாசிரியர் கொடுத்திருக்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாம். அதன்படி வாசகன் யோசிக்க நாவலாசிரியர் இடம் அளித்திருக்கிறார் என்று நல்லவிதமாகவே எண்ணிக் கொள்வோம்.

மட்டில்டா புதினத்தில் சில இடங்களில் பள்ளியின் சூழல் பற்றி வரும் சின்னச்சின்ன விசயங்கள் முக்கியமானவை என்றும் அவை இந்திய கல்விச்சூழலுக்கும் அவசியமானவை என்றும் கருத வைக்கின்றன.

மட்டில்டா நாவலின் இறுதியில் கீழே விழுந்த தலைமையாசிரியையை பரிசோதிக்க பள்ளியின் மருத்துவர் வருகிறார். நமது பள்ளிகளில் மருத்துவர்கள் பணிபுரிகிறார்களா.? மிஸ்.ஹனி தான் பார்க்கும் ஆசிரியப்பணியை சம்பளமே இல்லாமல் அர்ப்பணிப்புடன் செய்கிறாள். சம்மபளத்துடன், எவ்வளவுபேர் இங்கு அர்ப்பணிப்புடன் ஆசிரியர்களாக இருக்கிறார்கள்.? மேலும், ஆசிரியர் எனும் பொறுப்பைப் பணியாக பார்க்கின்றனரா அல்லது சேவை என்று பார்க்கின்றனரா..?

எவ்வளவு குழந்தைகள் ஆசிரியர்களை விரும்புகின்றனர்.? எவ்வளவு குழந்தைகளை ஆசிரியர்கள் அவர்களின் சமூகப் பொருளாதார சூழல்களை அறிந்து வைத்துள்ளனர்.? இந்த கதையின் ஓரிடத்தில் மட்டில்டா மிஸ்.ஹனியிடம் கூறுகிறாள். ‘பேசாம நீங்க வேலையை விட்டுட்டு அரசால் வேலையில்லாதங்களுக்கு கொடுக்கப்படுற உதவித்தொகையை வச்சு இன்னும் வசதியா இருக்கலாம் மிஸ்.ஹனி.’

‘என்னால அப்படி செய்யவே முடியாது. எனக்கு என் டீச்சர் வேலை ரொம்ப பிடிக்கும்’ என்றாள் மிஸ்.ஹனி. அதாவது உழைக்கத் தயாராக இருக்கிற, உழைக்கும் சக்தியோடு இருக்கிற இளைஞர்கள் படித்துவிட்டு அதற்கேற்ற வேலையில் இல்லையென்றால், அவர்களுக்காக அரசு ஒரு உதவித்தொகை அளிக்கும் முறையை நடைமுறைப்படுத்தியிருக்கிறது என்ற ஒரு ஆச்சர்யமான உண்மை (நமக்கு) இந்த உரையாடலின் மூலம் தெரியவருகின்றது.

படித்துவிட்டு உழைக்கும் தகுதியுள்ள இளைஞர்களை சும்மா வைத்திருப்பது தவறு என்று கருதுகிற அரசு அங்குள்ளது. அதே நேரம், இந்த காட்சி பெரிய விசயத்தைப் பற்றிய நீண்ட உரையாடலில் வருகிற சின்ன விசயம். போகிறபோக்கில் வந்துவிட்டு போகின்றது. அப்படி வருவதின் மூலம் அறியமுடிவது என்னவென்றால், படித்துவிட்டு

வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு உதவித்தொகை உண்டு என்ற நல்லவிசயம்.

நமது அரசுக்கு வைக்கும் கேள்வி இதுதான். கோடி கணக்கில் இளைஞர்கள் படித்துவிட்டு வேலையின்றி நிற்கிறார்களே, இவர்களின் வாழ்வுக்கு என்ன ஆதார வழி இருக்கிறது.? வயது தாண்டினால் உழைப்பு சக்தி அவர்களைவிட்டு விலகுமே. இவர்களுக்கு என்ன தீர்வு வைத்திருக்கிறது இந்த அரசு.? உழைக்கும் திறனுடன் இருக்கும் இளைஞர்களை உழைப்பில் ஈடுபடுத்தாமல் நிர்கதியாக விடுகிறதா அரசு.? என பலவாறான கேள்விகள் எழுகின்றன.

மினிமலிசம் (Minimalism) என்ற வாழ்முறையைப் பற்றி ஓரிடத்தில் நாவலாசிரியர் சொல்கிறார். நமக்கு தேவைவற்றை மட்டுமே வாழ்வதும் ஆடம்பரமற்று போதும் என்ற பொன்செய் மனதுடன் இருப்பதும் மினிமலிசம் என்று கூறப்படுகிறது. ஆடம்பரமாக இருக்க நினைத்தால் அதற்கான பராமரிப்பு பாதுகாப்பு என்று உழைப்பு வீணாகும். இன்றைய உலகில் மினிமலிசம் என்ற வாழ்முறை பிரபலமடைந்து கொண்டிருக்கிறது.

மிஸ்.ஹனி ஓரிடத்தில் அவரது வாழ்முறைப் பற்றி அந்நாட்டு ஏழை மக்களின் நிலைப் பற்றியும் கூறுகிறார். உதாரணத்திற்கு சீமெண்ணெய் அடுப்பில் வெந்நீர் வைத்து உடலைத் துடைத்துவிட்டுக் கொள்கிறார்கள். நம் நாட்டு மக்களும் வெந்நீர் வைத்து குளிக்கிறார்கள். Water Heater வைத்து குளியல் தொட்டியில் ஊறிக்கொண்டு குளிக்கும் பெருமுதலைகள் வாழும் நாட்டில் சீமெண்ணெய்கூட விலை அதிகமாகவே விற்கப்படுகிறது. ஆக, ஏழைகளுக்கான முழு சுகாதாரத்தையாவது அரசு தன் கையில் கொண்டிருக்கிறதா.?

நாவலில் மிஸ்.ஹனி தன் 100/1 மடங்கு கைக்காசில் டீயும் சீமெண்ணெயும் மட்டும்தான் வாங்கிக் கொள்ள முடிகிறது. சாப்பாட்டுக்கு எதுவுமில்லை, அதனால் பள்ளியில் மட்டும் மதியத்திற்கு நன்றாக சாப்பிட்டுக் கொள்வேன் என்று ஓரிடத்தில் கூறுகிறாள் மிஸ்.ஹனி. அதாவது மற்ற இரண்டு வேளையும் பட்டினியாக இருக்கிறாள். டீயும் பிஸ்கட்டும் காலை/இரவு உணவாக கொள்கிறாள். இப்பனி ஒரு சூழலில் நிச்சயம் எந்த ஆசிரியரும் இருந்து பணிபுரிய மாட்டார். ஆக, மிஸ்.ஹனியின் இப்படியான ஆசிரிய அணுகுமுறையை அர்ப்பணிப்பு என்று கூறாமல் இருக்க முடியுமா.? மட்டில்டாவின் வகுப்பில் ஒருநாள் தலைமையாசிரியை தான் படித்த ஒரு நாவலில் உள்ள கடுமையான குணம் கொண்ட கதாப்பாத்திரத்தைப் பற்றி பேசினாள். எதேச்சையாக மட்டில்டா தான் அந்த புதினத்தைப் படுத்திருப்பதாக சொல்கிறாள். அதை நம்ப மாட்டேன் என்று விடாப்பிடியாகத் திட்டுகிறாள் தலைமையாசிரியை.

இங்கு ஒரு குறைசொல் உண்டு ‘இப்பலாம் எந்த குழந்த புத்தகத்த படிக்கிதுக.?’ என்று. அவர்களைப் பொருத்தவரை, இக்கருத்து தனக்கு கீழ் வயதுள்ளவர்களைப்பற்றிய ஒரு பெரும்போக்கு எண்ணம் மட்டுமே. இதில் உண்மையைத் தேடினால், இல்லை என்று

பதில் வரும். மாணவர்கள் குழந்தைகள் என அனைவரும் புத்தகங்களை வாசிக்கும் பண்பு கிடையாது. ஆனால் எந்த அரசு பள்ளியில் அல்லது தனியார் பள்ளிகளில் நன்கு நூலுகளால் நிறைக்கப்பட்ட நூலகம் உள்ளது.? சிலவும் சொற்பவுமான நூல்கள் எப்படி அவர்களை ஈர்க்கும்.? அன்றி, தனியார் பள்ளிகளில் தாய்மொழியாலான நூல்கள் இருப்பும் மொழிமாறி படிப்பதிலும் பல பிரச்சனைகளை சந்திக்க நேரும்போது எப்படி நூல் வாசிப்பு பண்பு பெருகும்.?

பாடப் புத்தகங்களே கரடுமுரடாக இருக்கும் இருக்கின்றபோது, அதன் சுமையையேத் தாங்க முடியாமல் திணறும் குழந்தைகள் எப்படி பொதுவான பும்தகங்களை நாடுவார்கள்.? ஆக, கல்விச்சூழல் சரியாக இல்லை என்பது கண்கூடு. குழந்தைகளுக்கு புத்தகங்கள் சுமையாக இல்லாமல் இருந்தாலே பொதுவான புத்தகங்களை அவர்களே நாடுவார்கள்.

புதினத்தின் கதைக்களம் வெளிநாடு என்பதால் அங்கே இருக்கும் சில ஆரோக்கியமான முறைமைகளை நாம் சுவீகரித்துக் கொண்டு நம்மை செழுமைப்படுத்திக் கொள்வதில் நியாயமுண்டு. அங்கே இருப்பதோடு மாறுபடும் நம் கல்விச்சூழலில் பெயர்களை வைத்து யாரையும் அழைப்பது என்பது முக்கியமானதாகும். அங்குள்ள ஆசிரியர்களை மாணவர்கள் Mr., Mrs., Miss. என்ற முதல்மதிப்பு கூற்றுடன் பெயரையும் இணைத்து அழைப்பர். அதாவது, தமிழில் திரு., திருமதி., என்பன போன்று.

இங்கோ சூழலே வேறு. மரியாதை என்கிறப் போர்வையில் மாணவர்களை பெயர் சொல்லி அழைக்க விதிகள் அனுமதிப்பதில்லை. (ராட்சசி படம் இதில் விதிவிலக்கு) இதில் SIR என்ற சொல்லின் விரிவாக்கமாக, 'Slave I Remember', அதாவது சார் எனில் ‘நான் உங்கள் அடிமை,’ என பொருள் என்பதாக ஒரு கூற்று உண்டு. ஆசிரியர்களை மாணவர்கள் திருவுடன் சேர்த்து பெயர்களைச் சொல்லி அழைக்க அனுமதிக்கலாம். ஆனால் அது வழக்கத்திலேயே இல்லாத ஒன்று. அதே நேரம், மரியாதை என்ற போர்வைக்குள் மாணவர்களுடனான முதல் உறவே சாவகாசமின்றி போகின்றது ஆசிரியர்களுக்கு.

ஜேனஸ் கோர்ச்சாக் என்ற போலந்து நாட்டு குழந்தை கல்வியாளர் கூறிய கூற்றுகளில் இரண்டு மிக முக்கியமானவை.

1) உலகின் கொடூரங்களில் மிக மோசமானது ஒரு குழந்தை தன் அப்பா, அம்மா அல்லது ஆசிரியருக்கு பயப்படுவதாகும்.

2) குழந்தையின் நம்பிக்கையே உங்களுக்கான மிக உயர்ந்த விருது. ஆதாரம்: ஒவ்வொரு குழந்தையையும் நேசிப்போம் - ஜேனஸ் கோர்ச்சாக். பாரதி புத்தாகலயம் இந்த இரண்டுமே மட்டில்டாவில் நடக்கிறது. நம் நாட்டின் கல்விச்சூழலில் மாணவர்கள் பயப்படுகிறார்கள். ஆனால் மாணவர்கள் நம்பிக்கைக் கொள்ள யாருமில்லை, என்ற

அவலம் இருக்கிறது. நம் கல்வி முறையை மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அங்கெல்லாம் மட்டில்டா, டோட்டோ சான் போன்ற சிறந்த நல்லெண்ணங்களுள்ள படைப்புகள் தோன்றுகின்றன. இங்கே அவலமான படைப்புகளும் தோன்றியுள்ளன. மட்டில்டாவை ஆங்கிலேய எழுத்தாளர் ஒருவர் எழுதும்போது அது சாகசக் கதையாக விரிந்து சிறுவர்களை வசீகரிக்கிறது.

ஆனால் மட்டில்டா இந்தியாவில் எழுதப்பட்டிருந்தால் அது அவலப் படைப்பாகியிருக்கலாம். அதனால்தான் ஆயிஷா என்ற அவலப் படைப்பு நம் கல்வி முறையையே உலுக்கியது. மட்டில்டா போன்ற படைப்புகளும் இந்திய கல்வி முறையும் ஒப்பிட்டு பார்த்தால் நம் கல்விமுறை இற்றுப்போய்விடும். ஆனால் மட்டில்டாவைப்போல ஆயிஷாக்களும் வாழ வேண்டும். நன்றி.

– கார்த்தி டாவின்சி
(07.12.19/ 5:57 pm. NH Venue)

---




மிதுன்பாலா சதிஷ்குமார்
இரண்டாம் வகுப்பு,
தாயார் கார்டன்,
மன்னார்குடி.

# அப்பா

கோபக்காரராக
குடிகாரராக
முரட்டு மனிதராக,
பொறுப்பில்லாதவராகவே
பார்த்துப் பழகிய அப்பா,
அம்மாவை உடல் நலம்
சரியில்லாமல்
மருத்துவமனையில் சேர்த்த
அன்று,
அம்மாவின் கால்களுக்கு
பக்கத்தில் அமர்ந்து கொண்டு
சிந்திய
ஒவ்வொரு துளிக்கண்ணீரிலும்
காணாமல் போயிருந்தது...
அப்பாவை பற்றிய
எல்லா அவப்பெயர்களும்!
✸✸✸

# அம்மா

உடல்நலம்
சரியில்லாததால்
வேலைக்கு போக
முடியாத அம்மா,
இருக்கின்ற கொஞ்ச
உணவையும்
தன் குழந்தையின் பசி தீர்க்க
கொடுத்து விட்டு,
உறக்கம் வராமல்
விழித்துக் கொண்டிருக்கிறாள்...
இந்த வாரத்தில்
ஏழாவது முறையாக!
✸✸✸

# வேதனை

விலங்குகள் சம்பந்தமான
சேனல் ஒன்றில்,
புலி ஒன்று மானை
விரட்டி பிடிக்க போகையில்,
தொலைக்காட்சியை ஆப்
செய்து விட்டு,
அப்பா அந்த மான்
புலிகிட்ட இருந்து தப்பிச்சு
இருக்கும்ல,
என அழுதபடி கேட்கும்
மகளிடம்
தப்பிச்சு இருக்கும்,
என்ற ஒற்றை பொய்
சொல்லி
கடந்து போக நினைக்கையில்,
ஆயிரம் புலிகளிடம் அகப்பட்ட
வேதனையைத்
தந்து விடுகிறது எனக்குள்,
முன்பொரு நாளில் பொய்
சொல்லக்கூடாதென
மகளுக்கு
சொல்லித் தந்த பாடம்!
✸✸✸

# கண்ணாடி பொம்மை

சட்டென விழுந்து
உடைந்து போன
ஒரு
கண்ணாடி
பொம்மையாய் நான்
இருக்கிறேன்...
கல்லெறிந்த போதெல்லாம்
தப்பித்து
உன் கோப
சொல்லொன்றில்
உடைந்த பொழுதொன்றில்!
✸✸✸

## பசி

பசியோடு
காத்திருக்கிறோம்...
வீட்டுக்குள்ளே நானும்,
வெளியே நீயும்,
பசியின் வேதனைகள்
இருவருக்கும் ஒன்றே,
ஆனாலும் வேறுபடுகிறோம்...
மனிதன், விலங்கு என
இருவரையும் மௌனமாய்
பார்த்துக் கொண்டிருக்கிறான்,
நம்மை
படைத்த இறைவன்,
வேதனைகளை அறியாதவனாக!
✱✱

## புல்லாங்குழல்

என் வீட்டு
மாடியில்
மறந்து விட்டு வந்த
புல்லாங்குழலை எடுக்க
போன போது,
அதன் அருகே சோகமாய்
அமர்ந்திருக்கும்
பறவைக்கு தெரிந்திருக்கிறது,
தான் வசித்த
மூங்கில் மரத்தை அழித்து
உருவானது...
அந்த புல்லாங்குழல் என!
✱✱

## தாய்மை

நேற்று
அம்மாவை
கடித்த நாய்,
தன் குட்டியின்
பசிக்கு உணவு
தேடி
அலைந்து கொண்டிருக்கையில்,
ஓடிப் போய்
உணவு வைக்கும்,
அம்மாவின் முகத்தில்
புன்னகையைத் தவிர
வேறொன்றும் இல்லை
இப்போது!

### மு.முபாரக்
முதுநிலை எழுத்தர்,
எண் 273 வாளாடி கூட்டுறவு வங்கி,
வாளாடி.
இலால்குடி வட்டம்.
திருச்சி மாவட்டம் - 621218.
அலைபேசி எண் 8072600090

## புது கனவு

கலைந்து போன தூக்கம்
கனவுகள் மாறியதாலோ
என் உள்ளங்கள்
பதபதைத்த நாளோ?

## அழகிய தனிமை

அழுகையுடன் கலந்த சிரிப்போடு
ஒரு தனிமையின்
சுகம் காணலாகுதே!

## பெண்மை

உடைமைகள் புதிதான போது
பழையவை காணாமலாக
எண்ணங்கள் புதிதான போது
நினைவுகள் காணாமலாக
உடலமைப்புகள் புதிதான போது
விளையாட்டுகள் காணாமலாக
பெண்மை புதிதான போது
குறும்புகள் காணாமலாக
புது உறவுகள் புதிதான போது
என் கனவுகள் காணாமலாக
காலங்கள் கதைகளை தீர்மானிக்க
என் நிகழ்வுகள் புரிய தாமதங்களை
கூட்டி செல்கிறது ஏனோ
கூடு விட்ட புது பயணங்கள்
இனிமேல் தானோ.......

--
கனிமொழி சீனிவாசன்



ஓவியம்
பூரணி



# கண்டேன் கலவரமானேன்

விழி வீச்சால்..!
விழுந்தேன் வீழ்ந்தேன்..!!

சிரித்தாய்..!
சிதைந்தேன் சிந்தனை இழந்தேன்..!!

உதடுகள் அசைய..!
உறைந்தேன் ஊமையானேன்..!!

கதைத்தாய்..!
கரைந்தேன் காதல் கொண்டேன்..!!

உணர்ந்ததை..!
உன்னிடத்தில் உரைத்துவிட்டேன்..!!

காத்திருக்கிறேன்...
காதல் கொள்வாயா..?
கழுவில் ஏற்றிக் கொல்வாயா..??

- மனோ குணசேகரன்
புள்ளவராயன் குடிக்காடு

# துளிப்பாக்கள்

பறந்து மறைந்த பட்டாம்பூச்சி
கண்டுபிடித்துவிட்டேன்
மீண்டும் என்னை

விரிந்த பூவின் இதழ்கள்
மேகத்தைப் பார்க்கின்றன
தன்னைப் போல்

பலவீட்டுச் சோறு
அதே வயிற்றோடு
அமாவாசையில் காகம்

வெயிலை
சலித்திருக்கிறது
இலையுதிர்ந்த மரம்

சுட்டெரிக்கும் கோடை வெயில்
ஆரம்பமானது மழை
சட்டைக்குள்

விடியல் அழிப்பான்
அழித்துக் கொண்டிருக்கிறது
வண்ண நட்சத்திரங்களை

கலங்கரை விளக்கம்
ஒளியிட்டுத் தேடுகிறது
இருண்ட கடலை

நடுங்கும் கடலின் உடல்
தன்னையே போர்த்துகிறது
நிலவொளி

**சா.கா.பாரதி ராஜா,**
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு.603002.
9944315732, 8610078040

**ப. சௌந்தரியா**
பொறியியல் முதலாம் ஆண்டு
அஞ்சலை அம்மாள் மகாலிங்கம் பொறியியல் கல்லூரி



# தெருப்பாடகன்

கொள்ளை நோயே கொரானா
எல்லைத்தாண்டி ஏன் வந்தாய்
கொத்துக் கொத்தாய் மனிதரைச்
செத்துப்போக ஏன் செய்தாய்

ஊரடங்கு உத்தரவால்
உலகையாட்டி படைக்கிற
வீட்டுக்குள்ள சிறைப்படுத்தி
விஸ்வரூபம் காட்டுற

விலங்கக் கொன்னு தின்னதால
விதிச்சவெல அதிகந்தான்
கதவடைச்சிக் கலங்குறாங்க
காலனுந்தன் பயத்துல

எக்கச்சக்க வேலையெல்லாம்
ஏராளமா கெடக்குது
அக்கம்பக்கம் உறவுக்கூட
கிட்டவர நடுங்குது

நித்தம் வேலை செய்தால்தான்
ஏழை வயிறு நிரம்பிடும்
பத்துபாத்திரம் தேய்த்தால்தான்
பெத்த புள்ளைங்க உயிர்த்திடும்

காசுபணம் சேர்த்துவச்சவன்
வீட்டுக்குள்ள வாழலாம்,
காலம் முழுக்க பாடுபடுறவன்
காயும் வயிற்றால் நோவதா?

மூச்சுக்காற்றால் பரவும் நோயே!
மூளை உனக்கு இருக்குதா?
ஆசுபத்திரி வாழ்க்கை வாழ,
கூலிக்கெல்லாம் தகுந்ததா!

சீனாவுல பொறந்தவுண்ண
செய்தியில கேட்டேனே,
ஆனாயிப்போ அடுத்தவீட்டில்
காணும்போது பதைக்கிறேன்

ஒன்னாயிருந்தும் நாங்கலெல்லாம்
கொள்கையால தனித்தனி,
ஒன்னப் பார்த்த பின்னாடி
ஊட்டுக்குள்ள கூட்டணி

வருமுன்னே காப்பதற்கு
யாரும் கடமை செய்யல,
வந்த பின்ன காத்துக்கோன்னா
வறுமைத் தின்னும் ஒடம்பையே
கண்ணுக்குத் தெரியாமலே
காலனாகிக் கொல்லுற

அரசன் முதல் ஆண்டிவர
சரி சமமா சாய்க்கிற,
அரசன் வீட்டில் துட்டிருக்கு
ஆஸ்பத்திரியில் பொழச்சிப்பான்

அனாதைங்க நாங்களெல்லாம்
சமாதியில் புதைவதா,
ஆடிக்காரில் போனவனும்
அச்சத்துல மிதக்கிறான்
ஆண்டியாக வாழ்ந்தவனும்
அரைஉசுரில் கெடக்கிறான்

ஏற்றத்தாழ்வு எதுவுமில்ல
புரியவச்சது போதுமே,
ஆற்றல்கொண்ட அறிவியலும்
கலங்கிநிக்குது போய்விடு..
கருணைகாட்டி கொரானாவே
விரைந்து நீயும் அழிந்திடு,
தெருவில் வாழும் ஜனங்களின் மேல்
அருளை வாரி வழங்கிடு!

- பொன்.தெய்வா
ஐவேலி

# கைமாறு என் செய்வேன்

அரை வயிறு
கஞ்சி குடித்தாய்
என் முழு வயிறு
நிரம்புவதற்கு

காடு கழனியில்
கை கடுக்க  உழைத்தாய்
கல்வி நான் பெறுவதற்கு

நல்ல துணிகள் மறந்தாய்
புதிய ஆடை நான்
போட்டு ரசிக்க

தூக்கம் மறந்தாய்
நான் நிம்மதியாய் தூங்க

ஊரில் எல்லோரும்
என்னை நம்பாதபோதும்
ஒருத்தியாய் என்னை
முழுதும் நம்பினாய்

நானே உன் உலகம்
என்றாய்,
என் பிள்ளையே
எல்லோரினினும் மேல் என்றாய்

உறவுகள் உன்னை உதாசீனப்படுத்திய
போதும்
என் மகன் உத்தமன் என்றாய்

நோய்நொடியில் வீழ்ந்தாலும்
வாய் திறவாது என் நலனை எண்ணி
அயராது உழைத்தாய்

நான் வெற்றி பெற
நீ ஏறாத கோவில் இல்லை,
வேண்டாத தெய்வமில்லை,
நடக்காத பிராகரமில்லை

இன்று....
ஊரே சொல்கிறது
என் வெற்றியை
உன் கனவுகள்
நனவாகிப் போனதை

ஆனால் அதனைப்
பார்க்க
நீ மட்டும் இல்லை

யாரிடம் சொல்வேன்...!
எவரிடம் சொல்வேன்...!
உன் மகன் புகழ்..
ஊர் பேசுவதை
இனி..-
என்ன தவம் செய்வேன்...
உன் கடன் தீர்க்க....!

உன் கருவில் உயிராக
அடுத்த பிறப்பொன்று அமைந்தால
தாயே
நீ...
என் மகளாக பிறந்து
உன்கடனை அடைக்க
கைமாறு செய்யும் அம்மா



முனைவர். சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர், மன்னார்குடி

# இனிய உதயம்

என்னிலிருந்து
ஒரு கைப்பிடியளவு
என்னை எடுத்து வைக்கிறேன்.
எதிரிலிருந்தபடி
அதைப் பார்த்துக் கொண்டிருக்கும்
நீங்கள் பதற்றப்படுகிறீர்கள்.

என்னை எடுத்ததில்
வலியோ ரணமோ ஏதுமில்லை
எனக்கு.
என்னைப் போல் நீங்களும்
ஒவ்வொருவராய் கைப்பிடியளவு
உங்களை எடுத்து வைக்கிறீர்கள்.

அப்போது
உங்களின் பதற்றம் சுலபத்தில்
தொற்றிக் கொள்கிறது என்னில்.
ஒவ்வொருவரும்
ஒரு கைப்பிடியளவு எடுத்தது
மலைபோல் குவிந்திருக்க;

அந்த மலைக் குவியலின்
இடுக்கிலிருந்து
அன்பின் அரவணைப்பாய்
பாசத்தின் வெளிப்பாடாய்
நட்பின் அடையாளமாய்
ஒற்றுமையின் உன்னதமாய்
புத்தம்புது விடியலாய்
ஓர் இனிய உதயம்
நமக்காகப் பூக்கத் தொடங்குகிறது.

# அச்சம்

இருள் சூழ் அடர்வனம்
சில்வண்டுகளின் பயம்
கிளர்த்தும் கோர்வையற்ற
இசைக் கோர்ப்பு.
கார்முகில்களின் முந்தானை
மூடிய நட்சத்திரங்கள்.
ஒரு நாள் விடுப்பில்
அமாவாசை வெண்ணிலா.
ஓராயிரம் வயலின்களின்
புறப்பாடாய் மகிழ்ச்சியில்
கொட்டும் வெள்ளையருவி.
சருகுகளில் ஓடும் அரவமாய்
இதயத்தை நெருக்கும்
சலசலப்பில் ஓடைகள்.
ஒருபிடிப் பார்வையில்
வெளிச்சத்தைப் பீய்ச்சும்
தூரத்து மின்மினிகள்.
அண்டங்காக்கையின் நிறமாய்
என் தேகம்.
அந்நேரம் அச்சம் தவிர்த்தோட
எனக்கு வேண்டும் திடநெஞ்சம்.

- கவிதைகள் ஆக்கம்



**பாரியன்பன் நாகராஜன்**
குடியாத்தம் - 632602
அலைபேசி: 9443139353.

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal    Thiravukolmagazine